# நேபாள பிரதமர் சுஷில் கொய்ராலாவுக்கு பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் வாழ்த்து

**பிப்ரவரி 10, 2014**

பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், நேபாளத்தின் புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட சுஷில் கொய்ராலாவை வாழ்த்தினார். அவர் தனது வாழ்த்துச் செய்தியில் திரு கொய்ராலா பிரதமராக தேர்வு செய்யப்பட்டிருப்பது நேபாளத்தில் அரசியல் மாற்றத்தின் போது ஜனநாயகத்தின் பலனை ஒன்று திரட்டுவதில் முக்கியமான மைல்கல்லாக திகழும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டு இருப்பதாவது-

"தாங்கள் நேபாளத்தின் பிரதமராக தேர்வு செய்யப்பட்டதற்கு இந்திய அரசு மற்றும் இந்திய மக்களின் சார்பில் என் இதமான வாழ்த்துக்களை தயவு செய்து ஏற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் பிரதமராக தேர்வு செய்யப்பட்டிருப்பது, நேபாளத்தில் அரசியல் மாற்றத்திற்கான முயற்சியில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள ஜனநாயக ஆதாயங்களை ஒருங்கிணைப்பது மற்றும் நிறுவனப்படுத்துவதில் முக்கியமான மைல்கல்லாக அமைகிறது.

உங்களது சாதூர்யமான ஆளுமைப்பண்பும் வழிகாட்டுதலும் நேபாளத்தின் நிலைத்தன்மை மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு மேலும் வலு சேர்க்கும் என்பதிலும் உங்கள் தேசத்தின் மக்களின் அனைத்துப்பிரிவினரின் வேட்கைகளை பிரதிபலிக்கும் வகையில் விரிவான கருத்தொற்றுமை எட்டப்பட்டதன் அடிப்படையில் புதிய அரசியல் அமைப்புச்சட்டம் இயற்றப்படக்கூடிய சூழலை உருவாக்கும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன்.

நேபாளத்துடனான உறவுகளுக்கு இந்தியா மிகவும் முக்கியத்துவத்தை வழங்குகிறது. நெருக்கமான அண்டை நாடாக, தனித்தன்மை வாய்ந்த உறவினைக்கொண்டு, அனைத்து தரப்பினரிடையேயும் ஆழமான பிணைப்புகளைக் கொண்டும் உள்ளது. இந்தியாவில் நாங்கள் நேபாளத்தின் நிலைத்தன்மை, ஜனநாயகம் மற்றும் வளமைக்கான மக்களின் உணர்வுகளை மட்டும் பகிர்ந்துகொள்ளவில்லை, நேபாள அரசும் நேபாள மக்களும் தங்கள் லட்சியத்தை எட்டும் முயற்சியில் உறுதுணையாக இருக்கிறோம். எனவே இருநாட்டு மக்களுக்கும் பலன் கிடைக்கும் வகையில் இரு நாடுகளுக்கும் இடையேயான கூட்டாண்மையை மேலும் ஆழப்படுத்தும் முயற்சியை தொடர விரும்புகிறோம்.

உங்கள் தேசத்தின் வரலாற்றில் முக்கியமான தருணத்தில் அதன் பிரதமராக நீங்கள் பொறுப்பேற்கும் இந்த தருணத்தில், உங்கள் வெற்றிக்கும், உங்கள் தனிப்பட்ட உடல் நலனுக்கும் நல்வாழ்வுக்கும் நேபாள மக்களின் அமைதி மற்றும் வளமைக்கும் நான் என் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்களை தங்கள் வசதிக்கேற்ப இந்தியாவிற்கு வருகை தருமாறு இதமான மற்றும் இணக்கமான முறையில் இந்த தருணத்தில் நான் அழைப்பு விடுக்கிறேன்.”

புது தில்லி
பிப்ரவரி 10, 2014